ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1777/38 - 2012 සැප්තැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2012.09.28

*1777/38 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 132/29*(ii)

### அரசாங்க சேவை பரஸ்பர சகாய சங்கக் கட்டளைச் சட்டம்

*(283 ஆம் அத்தியாயமான) அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை பரஸ்பர சகாய சங்கத்தால் ஆக்கப்பட்டு நிதி மற்றும் திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.*

பி. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு,
14.07.2011.

**விதிகள்**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறானதும் கடைசியாக 2008, மே 2 ஆந் திகதிய 1548 ஆம் இலக்க, வர்த்தமானியினால் திருத்தப்பட்டவையுமான 1892, யூன் 17 ஆந் திகதிய 5147 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

2010 ம் ஆண்டின் யூலை மாதம் 14 ஆந் திகதிய 1662/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

(1) அத்தியாயம் 1 பொது விதிகள் என்னும் தலையங்கத்தின் கீழ் -

(அ) விதி 1 (i) என்பதில் "40 வயது அல்லது அதற்குக் குறைந்த" எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "45 வயது அல்லது அதற்குக் குறைந்த" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) விதி 1(ii) என்பதில் "40 வயது அல்லது அதற்குக் குறைந்த" எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "45 வயது அல்லது அதற்குக் குறைந்த" எனும் இலக்கங்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும் ;

(இ) விதி 3 இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விதி இடுவதன் மூலமும்:-

" ஒவ்வொரு உறுப்பினருக்கும் வைப்புப் புத்தகமொன்று வழங்கப்படுதல் வேண்டும். அப்புத்தகமானது சங்கத்தினால் வழங்கப்படுகின்ற அச்சிடப்பட்ட மாதிரியாக அல்லது இலத்திரனியல் உத்தி முறையொன்றின் மூலமாக தயாரிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்டதாக அமைதல் வேண்டும்";

(ஈ) விதி 4 என்பதில், அதன் (ii) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம்:-

"(iii) மாதாந்தம் உதவு தொகையாக அறவிடப்படுகின்ற பணத்திற்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 100 கணக்குடைய திரட்டிய விசேட சேமிப்பொன்றை மேற்கொள்ள முடியும். அதற்காக ஆண்டொன்றுக்கு 10% சதவீதம் வட்டியைச் செலுத்த வேண்டும். இவ்வைப்பின் முதிர்வுக்காலம் 2 ஆண்டுக்ள பூர்த்தியானதன் பின்னர் சேமிப்பை மீளப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது அவ்வைப்புப் பணத்தின் மீது ஆண்டொன்றுக்கு (12%) சதவீதம் வட்டிக்கு கடன் பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும்.".

(உ) விதி 6 இல்:-

(1) உப விதி (அ) என்பதில் அதன் (i) ஆம் பந்தி இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியானது இடுவதன் மூலமும்:-

" அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது அரச சேவையிலிருந்து பதவியை ஒழித்ததன் காரணமாகவும் வேலையை முடிவுறுத்தியதன் காரணமாகப் பதவியை இழந்த மற்றும் விதி 7 (அ) என்பதன் கீழ் உறுப்பாண்மையை இழந்த உறுப்பினர் ஒருவருக்கு விதி 12 இன் கீழ் 55 வயது பூர்த்தியானதுடன் தாம் செலுத்தியுள்ள முழு உதவு தொகையையும் தனது பெயரில் வரவு வைக்கப்பட்டுள்ள வட்டியையும் மற்றும் விதி 13 இன் கீழ் பெற்றுக் கொண்டுள்ள அனைத்து கடன்கள் அல்லது முற்பணத்திலிருந்து மேலும் செலுத்துவதற்கு நிலுவையாகவுள்ள தொகையைக் கழித்துக் கொண்டு எஞ்சிய பணத்தொகையை பெற்றுக் கொள்ள முடியும். அதன் பின்னர் அவர் "நன்கொடை செலுத்தும் உறுப்பினர்" எனக் குறிப்பிடப்படுவார். அவர் உதவுதொகையைச் செலுத்த விருப்பம் தெரிவித்தால் "உதவுதொகை செலுத்துகின்ற உறுப்பினர்" எனக் குறிப்பிடப்படுவார்:

(2) உப விதி (அ) என்பதில் அதன் (ii) என்னும் பந்தி இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியானது இடப்படுகின்றது:-

" விதி 6 (அ) (i) என்பதில் உதவு தொகையையும் அதன் வட்டியையும் மீளப் பெறாமல் அதற்குப் பதிலாக 12 மற்றும் 13 விதிகளின் கீழ் தாம் பெற்றுக் கொண்டுள்ள அனைத்து கடன்கள் முற்பணங்களுக்கு பற்று வைப்பதற்கும் சாதாரண உறுப்பினராக தொடர்ந்து இருப்பதற்கும் முடியும்:-

(ஊ) விதி 7 இல்:-

(1) பந்தி (ஆ)(ii) என்பதில் "ஆண்டொன்றுக்கு எட்டு சதவீதம்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "ஆண்டொன்றுக்கு பத்து சதவீதம்" என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்:

(2) அவ்விதியின் பந்தி (இ)(ii) ஆனது இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடப்படுவதன் மூலமும்:-

" எவரேனும் ஓர் உறுப்பினருக்கு வாழ்க்கைத்துணை, சட்டபூர்வமான பிள்ளை, நெருங்கிய உறவினர் அல்லது சட்டமுறையான மரபுரிமையாளர் எவரும் இல்லாவிட்டால் 10 ஆம் விதியின் கீழ் உரித்தாகவுள்ள மரண நன்கொடை முழுமையாக அல்லது அதன் பாகமொன்று எந்த ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்குச் செலுத்தப்படற்பாலதாகுமோ அந்த எவரேனும் ஆளை அல்லது ஏதேனும் நிறுவனத்தைப் பெயர் குறித்து நியமிக்கலாம். அவரது இறப்பிற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அனுப்பப்பட்ட ஏதேனும் பெயர் குறித்த நியமனம் செல்லுபடியாதல் வேண்டும்;"

(எ) விதி 10 (அ) (ii) என்பதில் பந்தி (ஈ) என்பதிற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடுவதன் மூலமும்:-

" மரண நன்கொடை பெருப்பித்தல் ஒதுக்கு நிதியத்தின் மேலதிகத் தொகைகளை உறுப்பினர்களுக்கு கடன் வழங்குதல் அல்லது பொதுத் திறைசேரியினால் அங்கீகரிக்கப்படுகின்ற முதலீடுகளில் ஈடுபடுத்துவது தொடர்பான பயன்பாடு பற்றி முகாமைத்துவக்குழு தீர்மானிக்கும். அதன் மீதான திரண்ட வட்டியை மரண நன்கொடை பெருப்பித்தல் ஒதுக்கு நிதியத்தில் வரவு வைக்கப்படும். மரண நன்கொடை பெருப்பித்தல் ஒதுக்கு நிதியத்தின் பணம் உறுப்பினர்களுக்கு கடன் வழங்குவதற்காக பயன்படுத்தப்படுமானால் விதி 13 (ii)(ஆ) என்பதன்கீழ், குறிப்பிடப்பட்டுள்ள சம்பளக் கடன் வழங்குவதற்காக பயன்படுத்தப்பட வேண்டுமென்பதோடு, அக்கடன் வகைக்காக குறித்த காலப்பகுதியில் அறவிடப்படுகின்ற வட்டியிலிருந்து நிர்வாகச் செலவினங்களுக்காக 1 சதவீதத்தைக் குறைத்து, எஞ்சிய தொகையை வருடாந்தம் மரண நன்கொடை பெருப்பித்தல் ஒதுக்கு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் ";

(ஏ) விதி 13 இல்:-

(1) பந்திகள் (ii) என்பதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(அ) விதி 13 (i) என்பதன் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள "உரித்தான கடன்கள்" எனும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதன்படி கடன் வழங்கப்படும்போது அத்தகைய கடன் தொகையானது அட்டவணையின் II ஆம் நிரை அல்லது III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட தொகையின் உச்சத்தை விஞ்சுதலாகாது:

(ஆ) விதி 13 (அ) மற்றும் விதி 14 இன்கீழ் ஏற்கனவே கடன் வழங்கப்பட்டுள்ள (ஓய்வு பெற்ற மற்றும் உறுப்பினர் பங்களிப்புத் தொகை ஈடு செய்யப்பட்டது) ஓர் உறுப்பினர் அத்தகைய கடன் தொகையின் மீது அறவிடப்படவேண்டிய வட்டியுடன் செலுத்தப்படற்பாலதான எஞ்சியுள்ள தொகையை முழுமையாக அறவிடப்பட்டதன் பின்னர் மட்டுமே மேற்படி 13 (ii) (அ) மற்றும் அட்டவணையின் 7 ஆம் விடயத்தின் கீழான கடன் தொகைகளைப் பெறுவதற்கு உரித்துடையவராவர் ;

(இ) விதி 13 (ii) (அ) என்பதன் கீழ் ஓய்வு பெற்ற உறுப்பினர் ஒருவருக்கு கடன் வழங்கப்பட்டிருப்பின் விதி 13(உ) தவிர்ந்த விதி 13(அ) முதல் 13 (ஔ) வரையான ஏதேனும் கடன் பெறுவதற்கு உரித்துடையவர் அல்லர்;

(ஈ) இந்த விதியின் கீழ் பெறக்கூடிய ஏதேனும் அதிகபட்ச மொத்த கடன் தொகையானது உறுப்பினரின் திரட்டிய சம்பளத்தின் அல்லது ஓய்வூதியத்தின் பன்னிரெண்டு மடங்கினை விஞ்சுதலாகாது."

கடன்களுக்கான உரித்துடைமை:

| | உறுப்பாண்மையின் கால எல்லை | 5% க்கு குறைவான உதவுதொகை | 5% க்கு மேற்பட்ட உதவுதொகை | அறவிடப்படும் தவணைகளின் எண்ணிக்கை | வேறு உரிய தேவைப்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| | i ஆம் நிரை | ii ஆம் நிரை | iii ஆம் நிரை | iv ஆம் நிரை | v ஆம் நிரை |
| 1. | 1 வருடத்திற்குக் குறைவு | ரூபா 5,000 | ரூபா 10,000 | 10 | 5 வருடங்களுக்கு மேற்பட்ட உறுப்பாண்மையுள்ள ஒருவர் உத்தரவாதியொருவராக முன்வைக்கப்படல் வேண்டும். |
| 2. | 1-3 வருடங்களுக்கு குறைவான | ரூபா 15,000 | ரூபா 20,000 | 20 | 5 வருடங்களுக்கு மேற்பட்ட உறுப்பாண்மையுள்ள ஒருவர் உத்தரவாதியொருவராக முன்வைக்கப்படல் வேண்டும். |
| 3. | 3-5 வருடங்களுக்கு குறைவான | 2 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம் (அதிகபட்சம் ரூபா 25,000) | 2 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம் (அதிகபட்சம் ரூபா 30,000) | 36 | பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பது அவசியமாகும். 5 வருடங்களுக்கு மேற்பட்ட உறுப்பாண்மையுள்ள ஒருவர் உத்தரவாதியொருவராக முன்வைக்கப்படல் வேண்டும். |
| 4. | 5-7 வருடங்களுக்கு குறைவான | 4 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம்/ ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 40,000) | 3 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம்/ ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 50,000) | 48 | பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பது அவசியமாகும். |
| 5. | 7-12 வருடங்களுக்கு குறைவான | 6 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம்/ ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 60,000) | 8 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம்/ ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 70,000) | 48 | பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பது அவசியமாகும். |

கடன்களுக்கான உரித்துடமை: (தொடர்ச்சி)

| | உறுப்பாண்மையின் கால எல்லை | 5% க்கு குறைவான உதவுதொகை | 5% க்கு மேற்பட்ட உதவுதொகை | அறவிடப்படும் தவணைகளின் எண்ணிக்கை | வேறு உரிய தேவைப்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| | i ஆம் நிரை | ii ஆம் நிரை | iii ஆம் நிரை | iv ஆம் நிரை | v ஆம் நிரை |
| 6. | 12 வருடங்களுக்கு மேல் | 6 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம்/ ஓய்வூதியம் (அதிக பட்சம் ரூபா 80,000) | 8 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம்/ ஓய்வூதியம் (அதிக பட்சம் ரூபா 100,000) | 48 | பதவியில் நிரந்தரமாக்கப்பட்டி ருப்பது அவசியமாகும். |
| 7. | 55 வயதை அடைய முன்னர் ஓய்வு பெற்று தமது கடன்தொகையை பங்களிப்புத் தொகை யிலிருந்து செலுத்தித் தீர்த்துள்ள உறுப்பினர் ஒருவருக்கு 55 வயது பூர்த்தியாகும் வரை. | மூன்று மாதங்களுக் கான ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 15,000) | ஐந்து மாதங்களுக் கான ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 30,000) | 48 | ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படுதல் வேண்டும். பங்களிப்பின் அரைவாசிக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக 5% பங்களிப்புச் செலுத்தப்படும். |
| 8. | விதி 14 இன்கீழ் கடன் பெற்றுக் கொள்ளாத நன்கொடை செலுத்தும் உறுப்பினர் ஒருவருக்கு | நான்கு மாதங் களுக்கான ஓய்வூ தியம் (அதிகபட்சம் ரூபா 25,000) | | 48 | 14 ஆம் விதியின்கடன் பெறுவதற்கான உரித்து கிடையாது. ஓய்வூதியத்திலிருந்து தவணைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| 9. | விதி 14 இன்கீழ் கடன் பெற்றிராத 35 வயதிற்கு குறைந்த நன்கொடை செலுத்தும் உறுப்பினருக்காக | 4 மாதங்களுக்கான திரட்டிய சம்பளம்/ ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 35,000) | | 48 | விதி 14 இன் கீழ் கடன்களைப் பெறுவதற்கு உரித்துடையவர் அல்லர். தவணைக் கொடுப்பனவுகள் ஓய்வூதியத் திலிருந்து மீட்கப்பட வேண்டும். |
| 10. | தனது பங்களிப்பை மீளப் பெற்று மீண்டும் பங்களிப்புச் செய்யும் நன்கொடை செலுத்தும் உறுப்பினருக்காக. | நான்கு மாத ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 35,000) | | 48 | விதி 14 இன் கீழ் கடன்களைப் பெறுவதற்கு உரித்துடையவர் அல்லர். தவணைக் கொடுப்பனவுகள் ஓய்வூதியத் திலிருந்து மீட்கப்பட வேண்டும். |

(2) அந்த விதியின் பந்தி (vii) இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

"விதிகள் 12 மற்றும் 13 (i) என்பதன் கீழ் பெற்ற சம்பளக்கடன் தொகைகளைத் தவிர ஏப்பிறல் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான ஏனைய கடன்களின் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகள் குறித்துரைக்கப்பட்ட வகையில் அறவிடுதல் வேண்டும்";

(3) பந்தி (vii) என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(viii) விதி 4 இன் குறித்துரைக்கப்பட்டவாறு தமது அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தை அல்லது அதற்குக்கூடுதலாக பங்களிப்புத் தொகையைச் செலுத்தி:கின்ற ஒரு உறுப்பினருக்கு 12 ஆம் மற்றும் 13 ஆம் விதிகளின் கீழ் வழங்கப்படும் கடனானது அவருக்கெதிராக சங்கத்தின் ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பங்களிப்புத் தொகையின் மற்றும் சேர்ந்துள்ள வட்டி/பங்கு இலாபத்தின் கூட்டுத்தொகையை விஞ்சாத சந்தர்ப்பத்தில் மேலும் அவருக்கு கடன் வழங்குவதற்கான அதிகாரம் தவிசாளருக்கு உள்ளது."

(4) விதி 13 (அ) இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விதி இடப்படுகின்றது. :-

(3) "மாதாந்த தவணைக் கொடுப்பனவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வட்டியின்றிய மாதாந்த தவணைக் கொடுப்பனவுகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமாகவும் ;

(ii) "மூன்று மாதங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறு மாதங்கள்" எனும் சொற்களை இடுவதன் மூலமாகவும்;

13 - அ - விதிக்கு நன்மை பெறுபவராக "வாழ்க்கைத்துணை மற்றும், விவாகமாகாத குழந்தைகள்" எனும் பிரிவை சேர்த்தல் மற்றும் பின்வரும் திருத்தங்களை பதிலீடு செய்வதன் மூலம்

(iii) "விதி 13 (அ) என்தானது 12 (அ) (i) என மீள் இலக்கமிடப்படுகின்றது;

(iv) விதி 13 (அ) என்பதில் பந்தி (i) ஐ உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ii) விதி 13 (அ) வில் குறிக்கப்பட்ட இடர்பாட்டுக் கடனுக்குப் பதிலாக அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக ஆண்டொன்றுக்கு 8 வீத வட்டியுடன் கூடிய 40 தொடர் மாதாந்த தவணைகளில் அறவிடப்படுகின்ற ஐம்பதினாயிரம் (ரூபா 50,000) விலான கடன் தொகையொன்றை வழங்க முடியும்";

(5) (i) விதி 13 (ஆ) என்பதில் பந்தி (i) " ஒரு வருட உறுப்பாண்மை" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " ஒரு வருடத்திற்கான உறுப்பாண்மை" என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும், " ரூபா 10,000" என்ற சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக "ரூபா 50,000" என்ற சொற்களையும் இலக்கங்களையும் முறையாக இடப்படுவதன் மூலமும்;

(ii) 13 (ஆ) என்பது 13 (ஆ) (i) என இலக்கமிடப்படுவதன் மூலமும்;

(iii) புதிய பந்தி பின்வருமாறு சேர்க்கப்படுவதன் மூலமும்;

"(ii) ஒரு ஆண்டு உறுப்பாண்மையைப் பூர்த்தி செய்யாத ஒரு உறுப்பினர் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பாண்மையைப் பூர்த்தி செய்த உறுப்பினரை உத்தரவாதியொருவராக முன்வைப்பதன் மூலம் கடனைப் பெற முடியும்."

(6) விதி 13 (இ) என்பதற்குப் பதிலாக பின்வரும் விதி இடப்படுகின்றது:-

" ஒரு ஆண்டு உறுப்பாண்மையைப் பூர்த்தி செய்த ஏதேனும் உறுப்பினருக்குப் பத்து மாதாந்த தவணைக் கொடுப்பனவுகள் மூலம் குறித்துரைக்கப்பட்ட வட்டியுடன் அறவிடக்கூடிய ரூபா 10,000 பண்டிகைக்கால கடன் தொகையாக வழங்கப்படும்"

(7) (i) விதி 13 (ஈ) இல் " ரூபா 10,000" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "ரூபா 50,000/-" என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ii) "8% என்ற இலக்கத்திற்குப் பதிலாக "10%" என்ற இலக்கத்தை இடுவதன் மூலமும் ;

(iii) "3" என்ற இலக்கத்திற்குப் பதிலாக "6" என்ற இலக்கத்தை இடுவதன் மூலமும் ;

(8) விதி 13 (ஊ) இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விதி இடுவதன் மூலமும்:-

" உறுப்பினரின் முதலாவது மற்றும் இரண்டாவது குழந்தை பிறந்த சமயம் குழந்தை பிறந்து ஒரு வருட காலத்துக்குள் அவர்களின் பிறப்புச் சான்றிதழை சங்கத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் ரூபா 7,500 இற்கு மேற்படாத கடன் தொகையை அதன் மீதான வட்டியுடன் வழங்கமுடியும். இக்கடனானது 24 மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளில் மீள அறவிடப்படும்;

(9) விதி 13 (எ) என்பதில் "பத்தாயிரம் ரூபா (ரூபா 10000)" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "ஐம்பதினாயிரம் ரூபா (ரூ. 50,000)" என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும், "36 சமமான மாத தவணைக் கொடுப்பனவுகள்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " 40 சமமான மாதாந்த தவணைக் கொடுப்பனவுகள்" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் "நூற்றுக்குப் பதினொரு வீதம் (11%)" எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "நூற்றுக்குப் பத்து வீதம் (10%)" வீதம் என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(10) 13(எ) விதியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதிகள் இடுவதன் மூலமும்:-

" (ஏ) சங்கத்தில் 2 வருடம் உறுப்பாண்மையைப் பூர்த்தி செய்துள்ள உறுப்பினரின் வாழ்க்கைத் துணைக்கு அல்லது திருமணமாகாத பிள்ளைகளுக்கு மூக்குக் கண்ணாடிக் கடனாக ரூபா ஐந்தாயிரம் (ரூபா 5,000/-) வரை வழங்கப்படும். இக்கடனானது ஆண்டொன்றுக்கு 10% சதவீத வட்டிக்கு 20 தவணைக் கொடுப்பனவுகளில் மீள அறவிடப்படும். இக்கடனானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை புதுப்பிக்கப்படுவதுடன் உதவுத் தொகை செலுத்தும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும்.

ஆயின், எவ்வாறாயினும், உறுப்பினரின் மாதச் சம்பளத்தில் 40% அதிகபட்சக் கழிப்பனவுக்கமைய உறுப்பினர்களின் மாதச் சம்பளத்திலிருந்து தவணைக் கொடுப்பனவுகளைக் கழிப்பனவு செய்யும் சாத்தியக்கூறைக் கருத்திற்கொண்டதன் மீது மாத்திரமே கடன் வழங்கப்படுதல் வேண்டும்.

"(ஐ) (i) சங்கம் இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கி போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்படும் திருத்தலயாத்திரைகளுக்கென தனியாட்களுக்கு அல்லது குழுக்களுக்கு அதிகபட்சமாக ரூபா ஐம்பதாயிரம் வரை (ரூபா 50,000) வழங்கும். சுற்றுலாவுக்கான எஞ்சிய தொகையானது மொத்தத் தொகையாக சங்கத்திற்கு வைப்புச் செய்யப்படுவதுடன் சங்கத்தினால் விமானப் பற்றுச்சீட்டு மொத்தச் செலவானது செலுத்தவும்படும்.

(ii) உறுப்பாண்மையின் ஐந்தாண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள உறுப்பினர்கள் மற்றும் எந்த உறுப்பினர்களின் சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த உறுப்பினர்களும் இந்த நலனுக்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்.

(iii) மொத்தக் கடன்தொகை ஆண்டொன்றுக்கு 15 சதவீதப்படி வட்டியுடன்சேர்த்து தொடர்ச்சியாக 25 தவணைக் கொடுப்பனவுகளில் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(iv) ஐந்தாண்டுகள் உறுப்பாண்மை வகிக்கின்றவரான உதவுதொகை செலுத்தும் உறுப்பினர் ஒருவர் உத்தரவாதமளிப்பவராதல் வேண்டும்.

"(ஒ) (i) உள்ளூர் சுற்றுலாக்களுக்கும் அல்லது திருத்தலயாத்திரைகளுக்கும், வீட்டுத் தளபாடங்களினதும் உபகரணங் களினதும் கொள்வனவுக்கும் அத்துடன் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்பதற்கும் உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்குவது சட்டமுறையானதாதல் வேண்டும்

(ii) உறுப்பாண்மையில் இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள உறுப்பினர் எவரும் தகுதியுடையவராதல் வேண்டும்,

(iii) அதிகபட்ச கடன்தொகை ரூபா 30,000 ஆதல் வேண்டும்,

(iv) மொத்தக் கடன்தொகை ஆண்டொன்றுக்கு 15 சதவீத (15%) வட்டியொன்றுடன் தொடர்ச்சியாக 20 மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளில் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(v) இரண்டு ஆண்டுகள் உறுப்பாண்மை வகிக்கின்றவரான உதவுதொகை செலுத்தும் ஒரு உறுப்பினர் உத்தரவாதமளிப்பவராதல் வேண்டும்."

"(ஐ) விதி 13 (ஒ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய விதிகளை உட்புகுத்துவதன் மூலமும்:

"(ஓ) (i) சங்கத்தில் 5 ஆண்டுகள் உறுப்பாண்மையைப் பூர்த்திசெய்துள்ள அரச சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உறுப்பினர்களின் பிள்ளைகளுக்குப் புத்தகங்களையும் காகிதாதிகளையும் கொள்வனவு செய்வதற்காக 10 தவணைக் கொடுப்பனவுகளில் மீள அறவிடப்படக்கூடிய வகையில் பத்தாயிரம் ரூபா (ரூபா 10,000) விலான விசேட முற்பணத் தொகையொன்று வழங்கப்படும். இதன் ஆண்டொன்றுக்கு வட்டி பத்துத சதவீதம் (10%) ஆகும்.

ஆயின் ஐந்தாண்டுகள் உறுப்பாண்மையைப் பூர்த்தி செய்யாத எவரேனும் உறுப்பினரொருவர் சங்கத்தில் ஐந்தாண்டுகள் உறுப்பாண்மையைப் பூர்த்திசெய்துள்ள உத்தரவாதமளிப்பவரை முன்வைத்து இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) உறுப்பினர் ஒருவருக்கு கணினி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 75,000 கடன் தொகையொன்று வழங்கப்படும். இக்கடனானது ஆண்டொன்றுக்கு 10% சதவீத வட்டியுடன் 50 மாத தவணைக் கொடுப்பனவுகளில் மீளஅறவிடப்படும். ஐந்தாண்டுகள் உறுப்பாண்மையைப் பூர்த்திசெய்யாத உறுப்பினர் ஒருவர் ஐந்தாண்டுகள் உறுப்பாண்மையைப் பூர்த்திசெய்துள்ள உறுப்பினரொருவரை உத்தரவாதமளிப்பவராக முன்வைத்தல் வேண்டும்.

(ஒ) விதி 14 இல் -

(1) "நூற்றுக்கு மூன்று சதவீதம் சாதாரண வட்டி (3%)" எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "நூற்றுக்கு நான்கு சதவீதம் சாதாரண வட்டி (4%)" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் :

(2) "அதன் பந்தி (1) இல் "முதுநிலையிலுள்ள இருபத்தைந்து உறுப்பினர்கள்" எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "முதுநிலையிலுள்ள ஐம்பது உறுப்பினர்கள்" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் "ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு (2500) கொடையளிப்பை மேற்கொள்ள வேண்டும்" எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "ஒருமுறை மாத்திரம்

செலுத்தப்படுகின்ற ரூபா ஐயாயிரம் (ரூபா 5000) கொடையாகச் செலுத்தப்பட வேண்டும்'' எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்

(3) அதன் பந்தி (2) இல் ''மூன்று மாத காலப்பகுதி'' எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக '' ஆறு மாத காலப்பகுதி'' எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்

(4) விதி 14(3) என்பதில் பந்தி (iii) இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடப்படுகின்றது:-

''மருத்துவத் தொழிலர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழானது உறுப்பினரை ஆபத்தான சூழலிருந்து பாதுகாப்பதற்காக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தினார் என்பதனை உறுதிப்படுத்தும்''

(5) விதி 14(3) என்பதில் பந்தி (iv) என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலம்:-

'' (v) சிகிச்சை பெறுவதற்கு முன்னர் அல்லது சத்திரசிகிச்சைக்கு முன்னர் மருத்துவ நன்கொடை வழங்கப்படமாட்டாது:

(vi) மருத்துவ நன்கொடையானது கண் சத்திரசிகிச்சைக்காக வழங்கப்படலாம்''

(6) விதி 14(3) என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதிகளை உட்புகுத்துவதன் மூலம்:-

''(4) முகாமைத்துவக் குழுவானது சங்கத்தின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு மருத்துவ நன்கொடையை வழங்குவதைத் தீர்மானிக்கும்.

(5) வாழ்நாள் முழுவதிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச மருத்துவ உதவித் தொகையாக 50,000 ரூபாவைப் பெற்ற உறுப்பினர் ஒருவர் அங்கத்துவத்திலிருந்து விலகும் பட்சத்தில் பங்களிப்புத் தொகையைக் கழித்து நிலுவைத் தொகையை மருத்துவ நன்கொடை நிதியத்திற்கு ரொக்கப் பணத்தில் செலுத்துவதாக பிரகடனத்தில் ஒப்பமிடல் வேண்டும்;''

(ஔ) விதி 15 இல் ''ஒவ்வொரு இரண்டு ரூபாவுக்கு குறையாத தொடர்ச்சியாக அறுபது மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளுக்கு மேற்படாத வகையில் மீளச் செலுத்தல்''என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''தொடர்ச்சியான நாற்பத்தெட்டு மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளுக்கு மேற்படாத வகையில் மீளச் செலுத்தல்'' எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்;

(ஔ) விதி 16 என்பதில் பந்தி (ii) என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

'' (iii) தனிப்பட்ட காரணங்களுக்காக விதிகள் 12 மற்றும் 13 இன் கீழ் பெறப்பட்டுள்ள கடன் தொகை சார்பாக அறவிடப்பட வேண்டியுள்ள மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளையும் வட்டியையும் மற்றும் அத்தியாயம் (ii) இன் கீழ் பெறப்பட்ட ஆதனக் கடன் சார்பாக அறவிடப்பட வேண்டியுள்ள பங்குப் பணத்தையும் வட்டியையும் தமது மாதாந்த சம்பளத்தில் அல்லது ஓய்வூதியத்திலிருந்து செலுத்த முடியாத உறுப்பினர்களுக்கு தலைவரின் அல்லது அவரது அதிகாரத்தைப் பெற்றுள்ள ஒரு உத்தியோகத்தரின் எழுத்திலான அனுமதியைப் பெற்று தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் சங்கத்திற்கு அல்லது தமக்கு அருகாமையில் அமைந்துள்ள வங்கிக்கு பணம் செலுத்துவதற்காக வாய்ப்பு வழங்கப்படலாம். எவ்வாறாயினும், மரண நன்கொடை உதவுத் தொகை மற்றும் மருத்துவ நன்கொடை என்பவற்றை சம்பளத்திலிருந்து செலுத்துதல் வேண்டும்.

(க) விதி 17 இல் பந்தி (ii) இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

''விதிகள் 13 மற்றும் 14 இன் கீழ் வழங்கப்பட்ட கடன் சார்பாக (ஒவ்வொரு நிதியாண்டினதும் அறவிடப்படுகின்ற வட்டியிலிருந்து நூற்றுக்கு பூச்சியம் தசம் ஐந்து (0.5%) சதவீதத்துக்குச் சமனான தொகையொன்றை) விலக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்காக பொதுஒதுக்க நிதியம் ஒன்று தாபிக்கப்படும். முகாமைத்துவக் குழு அத்தகைய ஒதுக்கத்தில் பற்று வைக்க வேண்டிய

பணத்தொகையை தீர்மானிக்கும்.''

(ங) மீள்இலக்கமிட்ட விதி 18 (i) என்பதனை உடனடுத்துப் பின்னர் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:-

'' (ii) ஒவ்வொரு விண்ணப்பமும் முறையாக பூர்த்திசெய்யப்பட்டு கையெழுத்திடப்பட்டு உடன்படிக்கையில் இணைக்கப்படுதல் வேண்டும். அதனை முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட உத்தரவாத முறியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.''

(ச) விதி 19 என்பதில் பந்தி (i) இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகள் இடப்படுகின்றது:-

'' i தேசிய இலாபத்திலிருந்து முகாமைத்துவக்குழு தீர்மானிக்கின்ற ஒரு பகுதியினை கட்டிட நிதியத்திற்கு ஒதுக்குதல் வேண்டும்.''

'' ii ஏதேனும் உறுப்பினருக்கு கட்டிட நிதியத்திலிருந்து ஏதேனும் கடன் வழங்கப்பட்டிருப்பின் விதி 13 இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட சம்பளத்திலிருந்து கடனைச் செலுத்துவதற்காக பயன்படுத்திக் கொள்ளப்படுவதுடன் அதில் ஒரு சத வீதமானது (1%). அக் காலப்பகுதியில் அறவிடப்படுப்படுகின்ற வட்டியிலிருந்து நிர்வாக நோக்கங்களுக்காக செலவுகளாக கழிக்கப்படும். எஞ்சியதை வருடாந்தம் கட்டிட நிதியத்துக்காகச் செலுத்தல் வேண்டும்.''

'' iii ஒவ்வொரு உறுப்பினரின் கணக்கில் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு வரவில் உள்ள அங்கத்துவ சேமிப்பு நிலுவையையும் அத்தினத்திற்கு வட்டி கணக்கில் உள்ள நிலுவையையும் அடிப்படையாகக் கொண்டு 5% வருடாந்த வட்டி வீதத்தை அந்தந்தக் கணக்கில் வரவு வைக்க வேண்டும் எனவும், அவ்வருடத்தில் இறக்கின்ற அல்லது உறுப்பாண்மையிலிருந்து நீங்குகின்ற உறுப்பினர்களுக்காக சமவிகிதாசாரத்தில் இவ்வட்டித் தொகையைச் செலுத்த வேண்டும். முகாமைத்துவ குழுவானது சங்கத்தின் வருமானத்தைக் கவனத்திற் கொண்டு வட்டி வீதத்தைத் திருத்தும்''.

(ஞ) விதி 22 என்பதில் ''நூறு உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''அறுபது உறுப்பினர்கள்'' என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(ட) விதி 25 (1) மீள் இலக்கமிடப்பட்டதன் பின்னர் உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலம்:-

''(ii) தபால் மூலம் மற்றும நேரடியாக கிடைக்கப்படுகின்ற சகல பெயர் நியமனங்களையும் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் என்போரினால் உடனடியாகப் பெட்டியொன்றில் இட்டு அதன் பின்னர் பொறியிடப்படும். நியமனப் பெட்டியானது விதி 25 இன் கீழ் நியமன முடிவுத் திகதி அன்று நடைபெறுகின்ற முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் திறக்கப்படும். வேட்பாளர்கள் இச் சந்தர்ப்பத்தில் பங்கேற்கலாம்;

''(iii) சங்கத்தின் வேட்பாளர் அல்லது வேறு ஏதேனும் நபர் ஒருவர் சமர்ப்பித்ததன் பின்னர் தாக்கல் பத்திரத்தில் மாற்றங்களைச் செய்ய முடியாது. வேட்பாளருக்கு தாக்கல் பத்திரத்தை ரத்துச் செய்தல் பற்றி எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும் ;''

(ண) விதி 25(ii) என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதிகளை இடுவதன் மூலம்:-

''26 (i) முகாமைத்துவக் குழுவானது சங்கத்தின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக சங்கத்தின் பிரதிநிதியாக ஏதேனும் மாவட்டத்தில், திணைக்களத்தில் அல்லது பிரதேச செயலகப் பிரிவில் இருந்து உறுப்பினர்களை நியமிப்பதற்கான அதிகாரம் உள்ளது ;

(ii) பிரதிநிதிகள் பகிரங்க சேவையில் இருந்து அல்லது மாகாணப் பகிரங்க சேவை, உள்ளூராட்சி மன்ற அரச சேவை உறுப்பினர்களிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

(iii) இப் பிரதிநிதிகள் ஏதேனும் பணத்தைப் பொறுப்பேற்கலாகாது என்பதுடன் பிரதிநிதிகளாக நியமனம் பெற்ற உறுப்பினர்கள் முகாமைத்துவக் குழுவுடன் உடன்படிக்கையில் ஈடுபடுதல் வேண்டும். முகாமைத்துவக் குழுவுக்கு அதிகாரம் பிரதிநிதிகளுக்கு கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதற்கு உள்ளது.

(iv) பிரதிநிதிகளின் கடமைகள் பின்வருமாறு,-

(அ) சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உறுப்பினர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஊட்டுதல்;

(ஆ) கடன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல்;

(இ) உறுப்பினரின் மரணம் பற்றி சங்கத்திற்கு அறிவித்தல் மற்றும் பல ;

(து) 26 விதி என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதிகளைச் சேர்த்தல்:-

"27. முகாமைத்துவக் குழுவினால் நியமிக்கப்படுகின்ற தகுதியான கணக்காய்வாளர் ஒருவரால் சங்கத்தின் கணக்கு தொடர்பாக கணக்காய்வொன்றை நடத்த வேண்டும்.

28. (i) சங்கத்தின் ஊழியர்களுக்கு ஆண்டு தோறும் மிகையூதியமொன்றை மிகையூதிய நிதியத்தில் இருந்து வழங்க வேண்டும். வருடாந்தம் முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற தொகையொன்று இந்த நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும். இந்த நிதியத்திற்காக தனியான வங்கிக் கணக்கானது பேணப்பட்டு வருதல் வேண்டும்.

(ii) வருடாந்துப் பொதுக் கூட்டத்தில் உறுப்பாண்மை மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்துடன் மிகையூதியமானது வழங்கப்படும்."

(2) (அ) அத்தியாயம் II என்ற தலைப்பின் கீழ் விதி 3 என்பதனை உடனடுத்துப் பின்வரும் விதியை உட்புகுத்துவதன் மூலம்:-

" இந்த விதியின் நோக்கங்களுக்காக "சட்ட ஆலோசகர்" என்பதானது முகாமைத்துவக் குழுவினால் நியமிக்கப்படும் சட்டத்தரணிகள் குழாமில் உள்ள ஏதேனும் சட்டத்தரணி" என்பதாகும்.

(ஆ) விதி 5 பந்தி (i) என்பதானது இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடப்படுவதன் மூலம்:-

"முதலாவது 50,000 ரூபாவுக்காக அறவிடப்பட வேண்டிய வட்டி ஆண்டொன்றுக்கு 10% ஆகும். எஞ்சியுள்ள ரூபா 4,50,000 தொகைக்காக அறவிடப்பட வேண்டிய வட்டியின் அளவு ஆண்டொன்றுக்கு 12% ஆகும்."

(இ) விதி 8 இல் "கணிப்பீட்டாளர் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சக் கட்டணமாகிய ரூபா 5" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "கணிப்பீட்டாளர் ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சக் கட்டணமாகிய ரூபா 500" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஈ) விதி 10 இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விதி இடுவதன் மூலம்:-

(i) கடன் தொகையானது 240 மாதாந்த அதிகபட்சத் தவணைக் கொடுப்பனவுகளில் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ii) கடன் தொகையும் வட்டியும் பஞ்சாங்காண்டு மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகளாக மாதாந்த சம்பளத்தில் இருந்து மீள அறவிடப்படுதல் வேண்டும்;

(iii) கடன் தொகை வழங்கப்பட்ட தினத்திலிருந்து அம்மாதம் முடிவடைய உள்ள நாட்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு, அந்த நாட்களின் எண்ணிக்கைக்கு மேற்படி விதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வட்டி வீதத்தின்படி சேர் வட்டியை கணக்கிட்டு கடன் தொகை செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அத்தொகையானது அறவிட்டுக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(iv) முதலின் தவணைக்கொடுப்பணவு மற்றும் வட்டி எந்த மாதம் தொடர்பில் கொடுப்பனவு வருமதியாகின்றதோ அந்த மாதத்தை அடுத்துறும் மாதத்தின் பத்தாம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து அத்தகைய முதலின் தவணைக்கொடுப்பனவு மற்றும் அத்தகைய வட்டி தவணைத் தவறுகையிலிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். மூன்று மாதங்கள் அல்லது அதற்கு மேல் தவணைத் தவறுகையின் விடயத்தில் முகாமைத்துவக் குழுவானது நிலுவையை மீள அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்;

(v) முதலின் தவணைக்கொடுப்பனவும் வட்டியும் தொடர்ச்சியாக ஆறு மாத காலத்துக்கு தவணைத் தவறுகையிலிருக்கும்போது தவணைத் தவறுகையின் தொகையை மீள அறவிடுவதற்காக சங்கத்தினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகள் குழாமினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதற்காக ஏற்படும் ஒவ்வொரு செலவையும் கடன்கொடுநரிடமிருந்து அறவிடப்படுவதுடன் பதிவுத்தபால் மூலம் அவருக்கு அனுப்பி வைக்கப்படும்;

*(உ) விதி 12 என்பதில் பந்தி (i) என்பதானது இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு பதிலாக பின்வரும் விதியானது இடுவதன் மூலமும்:–*

*ஆதனக் கடனானது நானூறு ஆயிரம் ரூபாவுக்கு (ரூபா 400,000) வரையறுக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரும் அவருடைய வாழ்க்கைத் துணை இருவரும் அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருப்பின் அவர்கள் ஐந்நூறு ஆயிரம் ரூபாவுக்கு (ரூபா 500,000) மட்டும் கடன் பெறுவதற்கு கூட்டாக உரித்துடையவர்களாவர்.*

*(3) அத்தியாயம் III என்ற தலைப்பின் கீழ் –*

*(அ) விதி 3 என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதியை உட்புகுத்துவதன் மூலம்:–*

*“ (i) உறுப்பினர் ஒருவரின் பிள்ளை புலமைப்பரிசில் பெறுவதற்காக தகுதியுடையவராக இருப்பின் அத்தகைய உறுப்பினரிடமிருந்து சங்கத்திற்கு அறவிடப்படவேண்டிய மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளானது தொடர்ச்சியாக அறவிடப்படும். உறுப்பினரின் பங்களிப்பு மூன்று மாதங்களுக்கு நிலுவையாகவுள்ள போது பிள்ளைக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசிலானது இரத்துச் செய்யப்படும்.”*

*(ஆ) விதி 8 இனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதியை உட்புகுத்துவதன் மூலம்:–*

*“ 9. விதிகள் 4 மற்றும் 8 இன் கீழான தகைமைகள் தவிர உறுப்பினரின் வேறு ஏதேனும் பிள்ளை ரூபா 2000 ற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது ஒரு தடைவை மாத்திரமே கல்விக்காக வழங்கப்படும். முகாமைத்துவக் குழுவிற்கு நிதியத்தின் வருடாந்த நிலைமைகளுக்குட்பட்டு இத்தொகையைச் செலுத்துவதற்கு அதிகாரம் உண்டு.”*

*(4) அத்தியாயம் III என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துவதன் மூலம்:–*

*“அத்தியாயம் IV : பணியாள்/ஊழியருக்கான கடன்.*

***இடர்பாட்டுக் கடன்:–***

*1. ஊழியரினது அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களின் ஏதேனும் இடர்பாட்டுக்கான காரணத்துக்காக அல்லது சுகயீன நிலைமைகளின் போது சிகிச்சை பெறுவதற்காக, ஊழியரின் மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் போன்று பத்து மடங்கிலான கடன் தொகை வழங்கப்படும்.*

(i) *கடனானது 100 மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளில் ஆண்டொன்றுக்கு 8% சதவீத வட்டியுடன் மீளச் செலுத்தப்படும்.*

(ii) *கடன் தொகை பெறப்பட்ட திகதி மற்றும் மீள் அறவிடப்படும் முதலாம் மாதம் அல்லது மொத்த வட்டியானது நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அட்டவணைப்படுத்தப்பட்ட விகிதத்தில் விதிப்பனவு செய்யப்படும்.*

(iii) *கடன் பெறப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்கள் கடந்த பின்னர் முதலானது வழங்கப்படுவதுடன், அறவிடப்பட்ட நிலுவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.*

(iv) *55 வயதைப் பூர்த்தி செய்யவுள்ள சேவைக்காலமானது 100 பஞ்சாங்க ஆண்டு மாதங்களுக்கு குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் அறவிடப்படாது எஞ்சியுள்ள நிலுவையை தமது பணிக் கொடையிலிருந்து அறவிட்டுக் கொள்வதை விரும்புவதாக பிரகடனமொன்றில் ஒப்பமிடுதல் வேண்டும்.*

(v) *அவரது சம்பளத்தில் வரையறை எல்லை 40% ஏற்புடையற்பாலதாகும்.*

(vi) *ஐந்தாண்டுகள் சேவையையுடைய எவரேனும் ஊழியரொருவருக்கு உத்தரவாதியொருவர் தேவைப்படமாட்டார்.*

(vii) *உத்தரவாதியொருவர் தேவைப்படும் பட்சத்தில் ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட சேவையையுடைய ஒன்று அல்லது இரண்டு ஊழியர்களை உத்தரவாதமளிப்பவர்களாக முன்வைத்தல் வேண்டும்.*

***சைக்கிள் கடன்:–***

*2. ஊழியர் ஒருவருக்கு சைக்கள் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக 6000 ரூபாவிலான கடன் தொகை வழங்கப்படும்.*

(i) *கடனானது ஆண்டொன்றுக்கு 10% சதவீத வட்டியில் 20 மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளில் அறவிடப்பட்டு மீளச் செலுத்துதல் வேண்டும்.*

(ii) *இக்கடனானது ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை வரையறைக்குட்பட்டு அவருடைய சம்பளத்தில் 40% வழங்கப்படும்.*

**செல்லிடத் தொலைபேசிக் கடன்:-**

3. எவரேனும் ஒரு ஊழியருக்கு செல்லிடத் தொலைபேசியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 10,000 கடன் வழங்கப்படும்.

(i) கடனானது ஆண்டொன்றுக்கு 10% சதவீத வட்டியுடன் 20 மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகளில் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ii) இக்கடனானது இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பெறப்படும்.

**காகிதாதிக் கடன்:-**

4. எவரேனும் ஒரு ஊழியருக்கு தமது பிள்ளைகளுக்கு புத்தகங்களையும் காகிதாதிகளையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,500 கடன் வழங்கப்படும்.

(i) கடனானது மாதாந்த தவணைக் கொடுப்பனவாக ரூபா 250 ஆதலுடன் ஆண்டொன்றுக்கு ஒன்பது தசம் ஒன்று ஏழு (9.17%) வட்டி வீதத்தில் மீளச் செலுத்தப்படும்.

(ii) கடனானது 10 மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளில் மீளச் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாத முடிவுக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(iii) இது முன்னைய கடன் மீளச் செலுத்தப்படும் வரை வழங்கப்படமாட்டாது.

**பண்டிகைக் கால கடன்:-**

5. ஊழியர் ஒருவருக்கு பண்டிகைக் கால முற்பணமாக ரூபா 5,000 வை விஞ்சாத கடன் தொகை வழங்கப்படும்.

(i) கடனானது ஆண்டு தோறும் பண்டிகைக்காக வழங்கப்படலாம்.

(ii) எதிர்வரும் ஆண்டில் அதே பண்டிகை வருவதற்கு முன்னர் மீள அறவிட்டுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(iii) இதன் ஆண்டொன்றுக்கு வட்டி எட்டு 8% சதவீதம் ஆகும்;

(iv) 03 மாதங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தினையுடைய ஒரு உத்தியோகத்தர் அல்லது ஊழியர் இதற்கு தகைமையுடையவர்களாவதுடன் ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலம் உள்ள உத்தரவாதியொருவர் தேவைப்படுத்தப்படுவார்;

(v) இக்கடனானது முன்னைய ஆண்டின் திகதியிலிருந்து 14 நாட்களுக்கு முன்னதாக எதிர்வரும் ஆண்டில் பெற்றுக்கொள்ள முடியும்.

6. கடன் வழங்கப்படுவதற்கான பொது நிபந்தனைகள் பின்வருமாறு:-

(i) கடனானது குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்;

(ii) ஏதேனும் எஞ்சிய தொகை இருக்கும் பட்சத்தில் ரொக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

(iii) அத்தியாவசியமான ஒவ்வொரு ஆவணமும் கடன் விண்ணப்ப படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்;

(iv) கடனை மொத்தமாக மீளச் செலுத்தும் வரை முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரமின்றி கடனுக்காகக் கைப்பற்றிக் கொண்டுள்ள ஆதனத்தை அப்புறப்படுத்துதலாகாது;

(v) உத்தரவாதியொருவர் சேவையிலிருந்து வெளியேறிச் செல்வாராயின் தகுதியான பிறிதொரு உத்தரவாதியொருவரை முன்வைக்கப்படும் வரை பிணையாளர் விடுவிக்கப்படமாட்டார்.

7. (1) கடன் விண்ணப்ப படிவமானது உள்ளடக்கியிருப்பதாவது:-

(i) பொதுவான கடன் விண்ணப்பப்படிவம்;

(ii) உத்தரவாதப் படிவம்;

(iii) ஒரு உடன்படிக்கை;

(2) விண்ணப்பகாரரின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் ஒவ்வொரு கடன் தவணைக் கொடுப்பனவும் வட்டியும் கழிக்கப்படும்.

(3) ஏப்பிறல், திசெம்பர் உட்பட ஒவ்வொரு மாதமும் கடன் தவணைக் கொடுப்பனவானது கழிக்கப்படுதல் வேண்டும்

(4) முகாமைத்துவக் குழுவிற்கு கடனை அங்கீகரிப்பதற்கான அதிகாரத்தை உடையது.

10-574

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.